1973 நவம்பர் 29]

மதகாக மாற்றுவதற்காக தயாரிக்கப்பட்ட ரூ. 90,000 மதிப்புள்ள திட்டம் விரைவு திட்டத்தில் சேர்க்கப்பட்டு 1973-74-ம் ஆண்டு நிறைவேற்றப்படும்.

Applications for new cement factories

* 491 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the State Government have recommended and forwarded to the Government of India any application for the starting of new cement factories in this State ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : திருச்சி போன்ற மாவட்டங்களில் அதிகமாக ஜிப்சம் கிடைப்பதால் அதை உபயோகப்படுத்தி தமிழ்நாட்டில் அதிகப்படியாக சிமென்ட் உற்பத்தி செய்வது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ? தனிப்பட்டவர்கள் சிமென்ட் தொழிற்சாலைகள் தொடங்க சர்க்கார் அனுமதி கோரி வந்திருக்கிறார்களா ? அதுபற்றி இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு ஏதாவது செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிய சிமென்ட் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும்போது அதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று இருக்கிறோம். இப்போது அப்படிப்பட்ட ஆலோசனை இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : புதுத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு இப்போது ஆலோசனை இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருக்கிற ஆலைகளை, அரசு நடத்துகிற ஆலைகளை எக்ஸ்பான்ட் செய்யும் திட்டமிருக்கிறதா ? அப்படியானால் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நேற்றே அதுபற்றி இங்கே விளக்கம் தரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அனுமதி தரப்பட்டதில் இப்போது நாம் எக்ஸ்பான்ஷன் வேலைகள் தொடங்குவதற்கு இருக்கிறோம்.

திரு. சு. துரைசாமி: புது ஆலைகள் தொடங்குவதற்கு இப்போது ஆலோசனை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புதுத் தொழிற்சாலைகள் தொடங்கப்படாததற்குக் காரணங்கள் என்ன? ஏற்கனவே தமிழ்நாட்டில் இருக்கிற சிமெண்ட் ஆலைகள் போதும் என்ற அடிப்படையிலா? அல்லது வேறு ஏதாவது காரணங்கள் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாட்டில் உள்ள ஏழு சிமெண்ட் தொழிற்சாலைகளில் 28 லட்சம் டன் உற்பத்தி செய்கிறார்கள். நம் தமிழ்நாட்டின் தேவை 12 லட்சம் டன்தான். புதிதாகத் தொடங்குவதென்றால் சுண்ணாம்புக் கற்கள் இருக்கிற தொழிற்சாலைகளுக்கு எவ்வளவு ஆண்டுகள் போதுமானதாக இருக்கும், புதுத் தொழிற்சாலைகள் வந்தால் அதனால் பாதிக்கப்படுமா என்று ஆராய்ச்சி செய்து முடிவு செய்யவேண்டும்.

Film shows in Madras Central Jail

* 492 *Q.*—THIRU N. DENNIS: Will he Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) whether film shows have been organised in the Madras Central Jail in 1973 (till August 1973);

(*b*) if so, the details thereof; and

(*c*) the criteria on which these films are selected?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ)—

தொடர் எண்.	திரைப் படத்தின் பெயர்.	திரையிடப்பட்ட நாள்.	திரையிட யார் ஏற்பாடு செய்தார்கள் என்பது.
1.	கப்பலோட்டிய தமிழன்	14—1—73	மயிலாப்பூர் அகாடமி, சென்னை-4.
2.	வா ராஜா வா	27—1—73	டான் பாஸ்கோ மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவர்கள், சென்னை.
3.	ஆராதனா	4—2—73	மயிலாப்பூர் அகாடமி, சென்னை-4.
4.	நெஞ்சிருக்கும் வரை	13—4—73	சிறைச்சாலைத் துறை.
5.	சூதாட்டம்	15—8—73	மயிலாப்பூர் அகாடமி, சென்னை-4.